உ
சிவமயம்



இவை
யாழ்ப்பாணத்து வடமராட்சி வடகரவை
நெல்லையம்பதி வாசரும் உயர்சைவ
வேளாண் மரபினரும்
முன்னைநாள் அரிசிஆலை அதிபர்
திரு. சி. இரத்தினசிங்கம் அவர்களின்
அன்பு மனைவியுமாகிய

# திருமதி இ. பொன்னம்மா

அவர்களின்
மறைவு குறித்த

# நினைவு மலர்.

**23-08-1993**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி

# பொன்னம்மா இரத்தினசிங்கம்

அவர்கள்

பூவுலகில்:
**22-12-1913**

பொன்னுலகில்:
**24-07-1993**

## திதி வெண்பா

நன்னலன்கள் தன்னகத்தார் பொன்னம்மா நம்சிவனின்
பொன்னடியைப் பூணப் பிரிந்தநாள்—மன்னுமுயர்
ஆண்டு சிறீமுகத்தில் ஆடிமதிப் பூர்வபக்கத்
திண்டுதிதி சட்டியென எண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# குலதெய்வம் பராவல்

## நெல்லை கொட்டிலிற் பிள்ளையார்

கோடொன்று கொண்டுநீ பாரத மாக்கதை நாம்பெறவே
கோடங்கெழுதிய தும்நினை வேன்கொட்டி லுற்றவனே
கேடென் றறியா நிறைவாழ்வு வாழ்ந்து முடித்துவிட்டேன்
பீடொன் றியவடி தன்னைப் பொருந்திடு பேறளியே.

## தடங்கன் புளியடி முருகன்

மானொன்றைத் தேடித் திணைப்புன மெங்கணும் ஓடினையம்
மானின் மகள்வள்ளி தன்னை மணந்தனை வேலவசீர்
தானொன்று மிந்தத் தடங்கன் புளியடி சார்ந்தடியார்
ஊனின் றுருகிட இன்னரு ளீவைநீ ஊட்டருளே.

## நெல்லைக் காளி

சீரார் நாகர் கோயிலென
நின்றன் அடியே பணிவார்தம்
ஏரார் அனலின் உலைமுகத்தே
இனிய வடிவிற் தோற்றினையாம்
பாரோர் பணியக் கொட்டிலிலே
பக்தி யோடு பூசித்தார்
தாரா காளி யம்மாவுன்
தாளே அடியே சார்ந்திடவே.

துன்பம் சிறுநோய் எதுவரினும்
தேடி யுந்தன் னயல்வந்து
என்புன் பிணிகள் தீரென்றே
இரக்க அவைபோம் நிலைகண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பும் உருக இன்னடியே
இரந்த ஏழை உய்திபெற
உன்பொன் னடிதா அம்மாவே
உற்றதுணையே நாருளரோ.

கூனிக் குறுகி நடைதளர்ந்து
கொண்ட போதும் காளியம்மா
ஈனப் பிறவி தொலைத்திடநான்
இரந்து நின்ற தறிவாயே
ஞானப் பெருக்கிங் கறியாநான்
நாளும் தாவி நடந்துவந்தேன்
ஊனிற் பொதிந்த உடல்போக்கி
உன்தாள் எய்த அருளாயே.

★ ★ ★

## அமரர் வாழ்வில்

எடுத்துக்காட்டாகக் கூறக்கூடிய எந்நலன்களும் கொண்டிருந்த குடும்பம் ஒன்று அந்நாளில் நெல்லியடியில் இருந்தது திரு. கணபதிப்பிள்ளையும் திருமதி வேதாத்தை கணபதிப்பிள்ளையுமே அவர்கள்.

தெய்வம், விருந்து, உறவோர் என்போரைப் பேணி இல்லறம் நல்லறமாக இனிது செய்துவந்த அவர்களின் தவமகள்தான் பொன்னம்மா அம்மையார். பிறந்தது 22-12-1913ல்.

பிறந்து வளர்ந்து சிறந்து நின்றவளை திரு. இரத்தினசிங்கம் என்னும் வணிக நெறியாளன் மணம்புரிந்து மனம் பூரித்தான். அம்மையும் பூரித்தாள். இருவரும் பூசித்தனர் கொட்டிலிற் பிள்ளையார், தடங்கன் புளியடி முருகன், நெல்லைக் காளி என்னும் தெய்வங்களை.

கொண்டானின் குறிப்பறிந்து, அன்னார் மகிழ ஆவன செய்து, அறம் புரிந்து, அரனடி பணிந்த பேறாக தவமணி, செல்வரத்தினம், செல்வச்சோதி, செல்வமலர் என்கின்ற நான்கு பெண் பிள்ளைகளைப் பெற்றார்; மகிழ்ச்சி பெற்றார்.

சீராட்டித் தாலாட்டி வளர்த்து, உரிய காலத்தில் உள்ளம் விரும்ப, அன்புக் கணவர் தேடிக்கொடுத்து இவர்கள் மகிழ்வு கண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகள் பெற்ற பாஸ்கரன், பாமா, பார்த்திபன்,பானுமதி ஆகியோரையும், இரண்டாவது மகள் பெற்ற கெங்காதரன். தயாபரன், முரளிதரன். பிரபாகரன், ஜெயசிறி ஆகியோரையும், மூன்றாவது மகள் பெற்ற ஒப்பிலாமணி, அனங்கன், கமலினி ஆகியோரையும், நான்காவது மகள் பெற்ற செந்தூர்ச் செல்வன், செந்தூர்க் குமரன், சிவானி ஆகியோரையும் தன் அரும் பேரப் பிள்ளைகளாகக் கண்டு கண்நிறைத்த செல்வத்தினராக விளங்கினார்.

தவமணியும், செல்வச்சோதியும் அன்னையிலும் முந்தி அரனடிப்பேறு கண்டுவிட அன்னவரின் பிள்ளைகளை அதிசிறந்த அன்பு காட்டி வளர்த்துவந்துள்ளார்.

மற்றிருவரின் கணவர்களான திரு. வல்லிபுரம், திரு. சகாதேவன் என்போர் மருகர் முறையினரானாலும் தன் மக்கள் போல நேசித்துப் பழகியவர்.

பேர்த்தி பாமா, சிவலிங்கத்தின் பிள்ளைகளான சிந்துஜா, பவானிஜா, சுவினஜா, பாஸ்கரன் மகன் தர்ஷன் என்போரைப் பீட்டப் பிள்ளைகளாய் கிடைக்கப்பெற்ற உயர் பேறுபெற்றவராய் இருந்தார்.

எவ்வகைச் செல்வமும் இவர் பெற்றனுபவித்தார். தன்னிறுதிக் காலத்தும் கொண்ட கணவன் பணிவிடை செய்வதிற் பேராவல் கொண்டிருந்தார். மனைவியாக மட்டுமல்ல, அன்னை போலவும் ஆதரித்து வாழ்ந்தமை, சுற்றம் அயலோர் பாராட்டியதால் அறியக்கூடியதே.

நடை தளர்ந்தும், நாளும் பணிந்த நெல்லைக் காளியை நாடிப் போகாத நாளில்லை. நெஞ்சுருகப் பணிந்து மனநிறைவு பெற்றார். அன்பும் பணிவும் அணிகலனாகக் கொண்ட அம்மையார் 1993-07-24ந் திகதி ஏத்திப் பணிந்த இறையடி சார்ந்தனர்.

அவர் ஆன்மா சாந்தி பெறுவதாக.

— மன்னவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையறுநிலைப் பாக்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சிறீமுகத்து ஆனதோர் ஆடியிலே
பூண்ட திதிசட்டி பூர்வபக்கம் — ஆண்டமகள்
பொன்மகளாம் பொன்னம்மா பொங்கரவம் பூண்டசடைச்
சங்கரன்றாள் சேர்ந்த தினம்.

## கணவன் கண்ணீர்

அன்புக்குப் பொருள்சொன்ன ஆருயிரே அஞ்சுகமே
துன்பக் கடல்தாண்ட தெப்பமாய் வந்தவளே
பொன்னின் திருமகளே பொலிந்த செல்வம் தந்தவளே
என்னைத் தவிக்கவிட்டு எங்குநீ சென்றனையோ,

எங்குநான் செல்வேனோ யாரிடத்தில் ஆறுவனோ
இந்த உலகமெல்லாம் எரிகாடாய்த் தெரியுதம்மா
பந்து சனம் விடுத்தேன் பரமனடி மறந்தேன்
நொந்து உளமுடைந்து நடைப்பிணமாய் ஆகிவிட்டேன்.

நங்கூரம் இல்லாத நாவாய் புயல்நடுவே
எங்கெல்லாம் அலைவதுபோல் என்னைநீ அலையவிட்டு
எங்குநீ மறைந்தனையோ என்னிதயத் தெய்வமே.
அங்கமெலாம் வாயாக அழுது புலம்புகின்றேன்.

பட்டிடினொளி வீசுகின்ற பால்வண்ண மேனியதை
தொட்டணைத்த கையாலே சுட்டெரித்த பாவிநான்
கட்டையிலே போகும்வரை கையிரண்டும் வேகுமம்மா
விட்டிடுமோ பாவமெனை விண்மகளே விளம்பாயோ.

மாடத்தைக் கட்டியங்கோர் மயிலைநடமாடவிட்டேன்
ஆடல் அழகதனை அள்ளியென்கண் குடித்ததையா
ஓடிப் பறந்ததையா ஒளிப்பிழம்பே அணைந்ததுபோல்
மாடமது காடான மாயமதை நானறியேன்.

தங்கச் சிலைகளென தவமகளிர் நால்வரைநீ
தந்து மகிழ்ந்தவளே தாயும்நீ தாரமும்நீ
சிந்தை தெளியவைக்கும் சற்குருநீ எல்லாம்நீ
அந்திவரை எனைக்காத்த அன்புருவே எங்குசென்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடியவென் ஆட்டங்கள் அத்தனையும் நீபொறுத்தாய்
வாடியொரு வன்மொழியை வண்ணமயில் உரைத்திலையே
தேடரிய செல்வமென தேன்மொழியால் எனையழைப்பாய்
ஓடிவிட்டாய் நீதியிதோ ஓட்டாண்டி ஆகினனே.

கோயிலெல்லாங் கொண்டுசென்று குறைகளெல்லாம்
தீர்க்கவென
நோயில்நீ வருந்துகையில் நோன்பிருந்து நேர்ந்தேனே
சேயழவே இரங்காத தெய்வமென்ன தெய்வமம்மா
கோயிலென்ற நினைப்பெல்லாம் குடிபோயே விட்டதம்மா.

## மகள் செல்வரத்தினம் வல்லிபுரம் உருகல்

பெற்றதெய் வம்நீ பத்துமா தஞ்சு மந்தெனைப் பட்ட வேதனை
பத்துநூ றாண்டுந்தன் சேவை செய்யினும் ஈடுசெய்திடப்
போதுமோ
உற்றசெல்வமென் உயர்துணைவனென் என்னரும் பிள்ளைச்
செல்வமென்
உந்தன் வாய்மொழிக் கீடுசெய்யுமோ உலகமே இணையாகுமோ
நற்றவஞ்செய்து பெற்றநால்வரில் இருவர் விண்ணினை மேவிட
நாடுவிட் டின்னோர் நாட்டினில் ஒருவர் நாதனோடின்பாய்
வாழ்ந்திட
முற்றிலும் பெற்ற கடனினைத் தீர்க்கும் பாக்கியம் பெற்றேன்
அம்மா நான்
மூண்டெரி துயர் ஆறிவாழ்ந்திட மேலிருந்தருள் நல்காயோ.

கண்ணிரண்டுமே காய்ந்து சோர்ந்திட காவல்செய்து உன்பக்கலில்
காலன்வந்துனை அணுகிடாமலே காத்துநின்றுளம்
சோர்ந்தனனே
உண்ணவே யியலா தென்றுநீ சொன்னநாள்முதல் அம்மா நானுமே
உண்டிடாமலே உடலந்தேய்ந்துநான் உருகியே உயிர்வாடினேன்
எண்ணிலாதன எண்ணியெண்ணிநான் ஏங்கிநின்று தவித்தனே
என்றுநீயெழுந் தென்துயர்தீர என்னைவாரி யணைப்பையோ
என்றுநான் ஏங்கும்வேளையில் என்னை விட்டுநீயந்த ஏமன்பின்
ஏனம்மா சென்றாய் எப்படிமனம் வந்ததோ அம்மா கூறுவாய்.

## இளைய மகள் செல்வமலர் சகாதேவன் புலம்பல்

அழுவதற்கோர் ஆயிரங்கண்
ஆண்டவனார் படைத்திலரே
ஆறுகுளம் ஆனதம்மா
அழுதறியாக் கண்ணிரண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழவுவந்த வேளையிலே
என்னிதயம் வெடித்ததம்மா
'ஐயோ' வென் றலறுங் குரல்
உன்செவியில் கேட்கலையோ.

உழவுமுனைப் பட்ட மண்போல்
என்னுள்ளம் உடைந்த தம்மா
என்றுன்னை இனிக்காண்பேன்
எனைப் பெற்ற தெய்வமேநீ.

தளர்வுகண்ட வேளையிலுன்
தலைமாட்டில் இருக்கவில்லை
தங்கத்தின் குவளையில் நான்
தண்பாலை வார்க்க வில்லை.

பழவினையின் பயனோதான்
பாவிநான் பிறநாட்டில்
பதைபதைக்க விட்டுவிட்டு
பறந்ததென்ன பெற்றவளே.

அழகுநிறை பேரருடன்
அன்பினிய கணவனோடு
அழுதழுதே வாழ்நாளை
அனவரதம் கழிக்கவிட்டு.

எழுதிவைத்தாய் உன்கவிதை
என்னருமை அம்மா நீ
என்கனவில் தோற்றாயோ
எனையழைத்துச் செல்லாயே.

விழுதுவிட்ட ஆலமரம்
விசைக்காற்றால் வீழ்ந்ததுபோல்
வீழ்ந்த தம்மா எங்குடும்பம்
வேதனையில் மிதக்குதம்மா.

**பேரர்-பேர்த்தியர்: செந்தூர்ச்செல்வன், செந்தூர்க்குமரன் சிவானி, பாஸ்கரன், பார்த்திபன், பாமினி, பானுமதி கதறல்**

என்பேரர் பேர்த்தி எங்கே யென்றலறி
உன்னாவி பிரிய விதியோ
எம்மாசையம்மா அப்பாவுடன் நாம்
உனைக்காண வரமுன் சதியோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னென்ன உணவு உடையோடு நகைகள்
அம்மம்மா உனக்குச் சேர்த்தோம்
அவையெல்லாம் இன்று கண்காண நெஞ்சு
அனலா யெரிந்து அழவோ.

உன்பக்கல்வந்து உன்சேவை செய்யும்
உணர்வோடு மகிழ்ந்து இருந்தோம்
எம்மாசை தன்னில் மண்வாரி யிட்டு
மறைந்திட்ட தென்ன அழகோ.

மின்னாமல் மின்னி மறைந்தாய் அம்மம்மா
மீண்டிங்கு வந்து எமையே
மீளாத துயரால் மீட்டன்பு நூறு
முத்தங்கள் தருவ தெப்போ

## பேரர், பேர்த்தியர்: கெங்காதரன், கெங்கா, தயாபரன், முரளிதரன், பிரபாகரன், ஜெயா, ஒப்பிலாமணி, அனங்கன் கமலினி புலம்பல்

கருவிலிருந்த நாள்முத லாய்நம்மை
காத்து வளர்த்த கருணை நினைந்து
உருகி மெழுகென தேய்ந்தழி கின்றோம்
எம்மை மறந்துநீ எங்கு மறைந்தாய்
அருமைமிகுந்த அம்மம் மாவுனை
எப்பிறவிதனில் நாமினிக் காண்போம்
அருவியெனக் கண்ணீர் சொரிந் தழுகின்றோம்
ஆறுதல் கூறிட ஓடிவாராயோ.

தோளிலும் மார்பிலும் தூக்கிய ணைத்தே
சந்திரனைக்காட்டி உணவினை ஊட்டி
வழிவரை வந்து 'பள்ளிக்கு' அனுப்பி
வரும்வரை காத்து உணவினை உண்பாய்
விழிகளில் தூக்கம் வரும்வரை விழித்து
வீணையின் ஓசையில் தாலாட்டுப் பாடி
களிப்புடன் நாம்துயில் கொண்டிடக் கண்டு
கண்ணயர்வாயே கருணையின் ஊற்றே.

பெரியவராகி உன்பணி செயுமுன்
பறந்தனை யம்மம்மா பதைக்கவிட் டெம்மை
எரியுது நெஞ்சம் ஏங்குதெம் சிந்தை
என்றுனை இனிநாம் காண்பதுமாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியுது கண்முன்னே தேன்சிந்தும் வதனம்
தேடுகின் றோமுன்னை வீடெங்குந் தேடி
அரியதோர் கல்வியில் நாம் நிலை கண்டுன்
ஆசையைத் தீர்ப்போம் அமைதி கொள்வாயே.

## பீட்டர், பீட்டியர் வேதனை

ஊரறியோம் உனையறியோம் உன்வாய்ச்சொல் தேனறியோம்
மார்பினிலே படுத்தறியோம் மதிகாட்டும் பாட்டறியோம்
தேரதிலே நீபோன செய்திதனைக் கேட்டதுமே
நீரருவிக் கண்ணீரில் நீந்துகின்றோம் நியாயமென்ன.

பாட்டியென்று அழைத்துனக்குப் பால்வார்க்கக் கிடைக்கவில்லை
வீட்டிலம்மா உனைப்பற்றி விதவிதமாய்க் கதைகள் சொல்வாள்
கேட்டு மகிழ்ந்திருந்தோம் கெதியில்வந்து பார்ப்பதற்கு
தீட்டிவைத்த திட்டமெல்லாம் தவிடுபொடி யானதம்மா.

## மருமக்கள் புலம்பல்

பெற்றவர்தான் தாயென்ற பேதமையை
போக்கியெமைப் பிள்ளைகள்போல் பார்த்த மாமீ
நற்றவத்தி னாற்பெற்ற நங்கை தம்மை
நம்மனைக ளாக்கிவைத்து நாம்விரும்பும்
பொற்குவையும் வீடுநிலம் பொலியத் தந்து
பொழுதெல்லாம் இன்பமாய் வாழச் செய்தாய்
சொற்களிலே கூறுவமோ சோகந் தன்னை
துயர்க் கடலுக் கொருதுளியைக் காட்ட லாமோ.

## மைத்துனர், மைத்துனியர் புலம்பல்

ஊரவர்கள் பார்வைக்கு மைத்து னிதான்
உண்மையிலே நீயெங்கள் உடன்பி றப்பே
வாரமுடன் உன்வீட்டு வாசல் வந்தால்
வரவேற்று உபசரிக்கும் வண்மை யொன்றே
ஈரமுடன் இப்பிறப்பு முழுதும் நாங்கள்
உனைநினைந்து உளமுருகப் போதுமம்மா
கூரம்பு பட்டபுண்போல் குளறு கின்றோம்
கூறாமல் கொள்ளாமல் போனதெங்கே.

## பெறாமக்கள், மறுமருமக்கள் புலம்பல்

நால்வரைநீ பெற்றாலும் பிள்ளை ஆசை
நலியவில்லை என்பதையுன் அணைப்பில் கண்டோம்
பால்வெள்ளை உளங்கொண்ட அம்மம் மாவுன்
பண்பிலே தாயினும்மேற் பரிவு கண்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மால்கொண்ட மறலியுனை மறைத்த போது
மண்மீது புரண்டழுதோம் மடிந்தே விட்டாய்
ஆல்கொண்ட பறவையினம் அம்பு பட்டு
அக்கினிமேல் விழுந்ததுபோல் துடித்தோம் தாயே.

## சுற்றத்தார், அயலவர் புலம்பல்

மிதித்திட்ட புல்சாகா மென்ன டையாள்
மேலென்றும் கீழென்றும் மக்கள் தம்மை
அதிகாரம் பணத்திமிரால் நோக்காக் கண்ணாள்
அயலவரை அன்பொழுக அணைக்கும் கையாள்
விதிவரைந்த பாதையிலே நடக்கும் காலாள்
விண்ணடைந்த போதுசுற்றம் விம்மிவிம்மி
கதியற்ற மானினம்போல் கதறக் கண்ட
காலனுமே கலக்கமுடன் கடமை செய்தான்.

## தேற்றம்

ஆக்கமும் அழிவும் அலர்வதும் உதிர்வதும்
தூக்கமும் விழிப்பும் துன்பமும் இன்பமும்
இரவும் பகலும் இறப்பும் பிறப்பும்
ஒருநா ணயத்தின் இருமுகம் போன்று
இருமைத் தாயினும் கருவினில் ஒருமையே
அதனால்,
பொன்மகள் பொன்னம்மை பொங்கர வணிந்த
சங்கரன் பதஞ்சேர்ந் தின்பில் திளைத்து
பவக்கடல் நீந்தினள் சாந்தி!
கவலை தவிர்ப்பீர் கடமை புரிவீர்.

— இசைக்கவி

## நன்றி

எமது குடும்ப விளக்கு (திருமதி பொன்னம்மா இரத்தின சிங்கம் அவர்கள்) அணைந்தபோது வருகை தந்து நமது துன்பத்தில் பங்குகொண்டோர்க்கும் செய்திகள் மூலம் தமது அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும், இன்றைய அந்தியேட்டிக் கிரியையின் போது சமூகமளித்துச் சிறப்பித்தோர்க்கும் நமது இதயபூர்வ நன்றிகள்.

ஜோதிமில்,
நெல்லியடி கரவெட்டி.
23-8-1993.

குடும்பத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org